**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 28 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.10 (பட்டியல் சாட்சி–10) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஹாஜா மைதீன் | த/பெ.: | கமாலுதீன் |
| கிராமம்: | மூலக்கடை, மெயின் ரோடு, பாமணி. | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | முஸ்லீம் | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 66 | முகவரி: | மூலக்கடை, மெயின் ரோடு, பாமணி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 28.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி ரமேஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக போடப்பட்ட கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகசரில் முதலாவதாக போடப்பட்ட கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்துகள் மட்டும் **அ.சா.ஆ.4 மற்றும் 5** ஆகும். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. நான் எந்த பொருளையும் பார்க்கவில்லை. ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து மட்டும் போட்டேன்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

28.10.2022–ல் 14.00 மணிக்கு திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.561/2022 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான ரமேஷ், வேணுகோபால், ஜனார்த்தனன் ஆகியோர்களை ஆய்வாளர் கைது செய்தார்

என்றும், பின்னர் ஆய்வாளர் விசாரணை செய்தபோது எதிரி ரமேஷ் என்பவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதின்பேரில் நானும், சாட்சி அண்ணாதுரை என்பவரும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம் என்றும், பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தலைக்காடு வேணுகோபால் வீட்டிற்கு பின்புள்ள வேலிக்கு பக்கத்தில் எதிரி அடையாளம் காட்ட 18.10 மணிக்கு சவுக்கு உருட்டு கட்டை சுமார் 66 செ.மீ நீளமுடைய ஒரு சவுக்கு கட்டையும், சவுக்கு கட்டை சுமார் 96 செ.மீ நீளமுடைய ஒரு சவுக்கு கட்டையும், இரும்பு கம்பி 69 செ.மீ நீளமுள்ள ஒன்று ஆகிய பொருள்களை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதின் படி நானும், சாட்சி அண்ணாதுரை என்பவரும் மேற்படி கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக இருந்து கையொப்பம் இட்டோம் என்றும், தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.